| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | | |
| மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **08/05/2024** | முதல் | **12/05/2024** | |
| அறிக்கை எண் : | **037/ 2024** | வெளியீட்டு நாள் : | | **07/05/2024** | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 40°-42° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 29° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை** (02.5.2024 **முதல்** 06.05.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 12-05-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02/05 | 03/05 | 04/05 | 05/05 | 06/05 | **தேதி** | **நாள்-1** 08/05 | **நாள்-2** 09/05 | **நாள்-3** 10/05 | **நாள்-4** 11/05 | **நாள்-5** 12/05 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | மழை (மி.மீ) | 1 | 9 | 6 | 7 | 5 |
| 41 | 42 | 40 | 41 | 42 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 42 | 40 | 39 | 39 | 38 |
| 29 | 29 | 29 | 29 | 29 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 29 | 27 | 26 | 26 | 25 |
| 3 | 6 | 3 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 8 | 8 | 7 | 7 |
| 60 | 76 | 77 | 56 | 56 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 60 | 70 | 80 | 80 |
| 34 | 54 | 45 | 38 | 41 | | 30 | 30 | 40 | 40 | 50 |
| 8 | 8 | 7 | 13 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 8 | 10 | 10 | 10 |
| தெற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தெற்கு | தெற்கு | காற்றின் திசை | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** | தென் **கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 8, 10, 11, 12 தேதி லேசான மழையும் மற்றும் 9 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 38°-42° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° - 29° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மே 8 மற்றும் 9 தேதி இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு. மேலும், மணிக்கு 30 முதல் 40 கி.மீ வேகத்தில் தரைக் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, கொய்யா, முருங்கை பயிர்களுக்கு மண் அனைத்தல், கரும்பு பயிருக்கு விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடி வகை பயிர்பந்தல்களில் துரு பிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமல், மின்கம்பம் மற்றும்

கொள்ளப்படுகிறார்கள்

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு (08.05.2024 மற்றும் 09.05.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பதத்துடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்

.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : , மல்லிகை, கால்நடை.**

**நெல்:**

நெல் வயலில் நடவு செய்வதற்கு முன் இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்துவது அவசியம்.

ஒரு எக்டேருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் 2 கிலோ பாஸ்போபாக்டீரியா அல்லது 4 கிலோ அசோபாஸ் என்ற அளவில் எடுத்து, 25 கிலோ மக்கிய பண்ணை உரம் மற்றும் 25 கிலோ பெரு மணலுடன் நன்கு கலந்து, நடவு செய்யப்படும் நிலத்தில் நடவிற்கு முன் சீராகத் தூவி விட வேண்டும்.

**மல்லிகை:**

மல்லிகைப் பூப் பயிரில் மொட்டுப் பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. தாக்குதலின் ஆரம்பநிலையில் பாதிக்கப்பட்ட மொட்டானது மஞ்சள் கலந்த சாம்பல் நிறத்தில் காணப்படும். மொட்டுக்கள் பெரிதாகாமல், சிறுத்து, காபி நிறத்தில் மாறி பின் காய்ந்து விடும்.

இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி என்ற அளவில் புரோபன்னோபாஸ் மற்றும் 20 கிராம் கார்டாப் ஹைட்ரோகுளோரைடு உடன் 10மில்லி ஒட்டுப்பசை சேர்த்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை:**

சமீப நாட்களில் ஆங்காங்கே கோடைமழை பெய்துள்ள நிலையில் வைக்கோல் மற்றும் மக்காச்சோள தட்டை போன்ற தீவன பொருட்களில் பூஞ்சாணத் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

வைக்கோல் மற்றும் சோளத்தட்டைகளை வெயிலில் நன்கு உலரத்தி கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் போன்ற நச்சு பூஞ்சாணங்களின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்கலாம்.